Registered as a NewsPaper

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

விலை ரூபா 7.00

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி - 03 | 20 - 08 - 2003 | புதன்கிழமை | ஓசை 183

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்.
பாடல் பதிவுகள்
அனைத்திற்கும்

Jaffna Road,
Kilinochchi.

யாழ் சாலை,
(தி-8437) கிளிநொச்சி.

# நாம் கோருகின்ற இடைக்கால நிர்வாகம்

# வட, கிழக்கு வாழ் அனைத்து மக்களுக்குமானதே!

## பாரீஸ் புறப்படும்வேளையில் சு.ப.தமிழ்ச்செல்வன்

(அலுவலக செய்தியாளர்)

**வடக்கு-கிழக்கைத் தாயகமாகக் கொண்ட அனைத்து மக்களுக்கும் நன்மையளிக்கக் கூடியவகையிலான இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைக்கவே நாம் முயல்கிறோம். தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் நாம் இதனை மேற்கொள்ளவுள்ளோம். இதனை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என நம்புகிறோம் என அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று பாரிசிற்குப் புறப்படும் போது செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பிரான்சில் எங்களுடைய சட்ட வல்லுநர்கள், துறை சார்ந்த வல்லுநனர்களைச் சந்தித்து இடைக்கால நிர்வாகம் பற்றி ஒரு வரைவை வடிவம் கொடுக்க இருக்கின்றோம்.அது சம்பந்தமான கலந்துரையாடல்கள் அங்கு நடைபெறும்.நிச்சயமாக அமைக்கப் போகின்ற இந்த இடைக்கால நிர்வாக அலகில் வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களுக்கு அவர்களுடைய அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் கருத்தில் எடுக்கப்படும்.

வடக்கு-கிழக்கை தாயகமாகக் கொண்ட அனைத்து மக்களுக்கும் நன்மையளிக்கக் கூடிய வகையிலும் தமிழ் மக்களுடைய அபிலாசைகளையும் இன்றைய

(08 ஆம் பக்கம் பார்க்க)





## நெடுந்தீவு மீனவர்கள் மீது கடற்படை திடீர் சோதனை

### இந்திய மீனவர்களைப் பிடித்தது குறித்து விசாரணை

தொழிலுக்காக கடலுக்குச் செல்லும் நெடுந்தீவு மீனவர்கள் மீது கடற்படையினர் கடும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது. நேற்று முன்தினமும், நேற்றும் இவ்வாறான கெடுபிடிகளை என்றுமில்லாதவாறு தீவிரமாக மேற்கொண்ட படையினர் தம்மால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளைக் கடுமையா கச் சோதிப்பதுடன் மழை காரணமாக நனைந்துள்ள அடையாள அட்டைகளை வைத்திருப்போரை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் குண்டுவெடிப்பு

மன்னாரில் ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கும், பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குமிடையிலுள்ள உதவி கரத்தின் முன்பாகவுள்ள வயலவெளி வீதியில் 9.20 மணியளவில் குண்டு ஒன்று வெடித்துள்ளது. அவ்விடத்தில் பொலிஸ் காவலரண் ஒன்று இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (மி)

### - மாதகல் கடற்பரப்பில் உள்ளூர் மீனவரின் -

## வலையை மீனுடன் எடுத்துச்செல்லும் இந்திய மீனவர் குறித்து முறைப்பீடு

மாதகல் மற்றும் குடா கடற்பரப்பில் கடந்த சில நாட்களாக 10க்கும் அதிகமான இந்திய மீன்பிடிப்படகுகளின் நடமாட்டம் காணப்படுவதாக அப்பாவி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு இரவு வேளைகளில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இவர்கள், கடற்றொழிலில் ஈடுபடும் மக்கள் மாலை நேரத்தில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### - யாழ்.முகமாலை சோதனைச் சாவடியில் -

## காணாமல் போன உறவினரை தேடிச்சென்றவரைக் காணவில்லை

காணாமற்போன தன் உறவினர் ஒருவரைத் தேடிச்சென்றவர் முகமாலைப் பகுதியில் வைத்து காணாமல் போயுள்ளார்.மேற்படி இரு நபர்கள் காணாமல்போன சம்பவங்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது; கிளிநொச்சியிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கா.தேவராஜா கனிஸ்டன் (வயது-22) எனும் இளைஞன் கடந்த மே 05ம் திகதி புங்குடுதீவிலுள்ள

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பாம்புக்கடிக்கு சிறுவன் பலி

பரந்தன் உமையாள்புரம் பகுதியில் பாம்புக்கடிக்கு இலக்கான சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்தார். குமரபுரம் கிளி/இந்து ம.வி.யில் கல்விகற்கும் ஆண்டு ஐந்து மாணவன் மகேந்திரன் தமிழரசன் (வயது 09) என்பவரே உயிரிழந்தவராவார். நேற்று அதிகாலை சிறுவன் உறக்கத்தில் இருந்த சமயமே பாம்பு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நடவடிக்கைகள் பற்றி ரணில் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்

### - சனாதிபதி சந்திரிகா வலியுறுத்து

மாற்று அரசியல் கட்சி உறுப்பினர்களையும் படைவீரர்களையும் கொலை செய்வதோடு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முகாம்களை அமைக்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து பிரதமர் இதுவரை நாட்டிற்கு தெளிவுபடுத்தவில்லையென சனாதிபதி தெரிவித்துள்ளார். சமாதான நடவடிக்கைகள் குறித்து தொழில்சார் நிபுணர் சங்கத்தின் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே சனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவில் சனாதிபதியின் பிரதிநிதியொருவரை சேர்த்துக்கொள்ளுமாறு ஆரம்பம் முதல்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வரலாற்று கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழத்தின் கடைசி மன்னனான மாவீரன் பண்டார வன்னியன் ஆங்கிலேயரின் முல்லைத்தீவு படைமுகாமை வெற்றிகொண்ட இருநூறாவது ஆண்டு நிறைவு விழாவை நினைவுகூரும் தமிழீழ வரலாற்றுக் கண்காட்சியும் நடைபெறவுள்ளது. தமிழர் வரலாற்றையும் தமிழீழ போரியல் வரலாற்றையும் சித்தரிக்கும் வகையில் கிளிநொச்சி ம.வி.யில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூருக்கு முஸ்லிம் ஊர்காவற்படை தமிழ் மக்கள் மத்தியில் பதற்றம்

(லண்டன்)

மூதூர் பகுதியில் தமிழ்மக்கள் தொடர்ந்தும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். திருகோணமலை நகரிலிருந்து மூதூருக்குச் செல்வோருக்கு பாதுகாப்பு வழங்க முடியாதென சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளதாக பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரவு வேளை தமிழ் மக்கள் அச்சம் காரணமாக மூதூர்அந்தோனியார் பேராலயம் மெதடிஸ்த தேவாலயம் என்பவற்றில் தங்கி வருகின்றனர். தமிழ் மக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. மூதூர் பாதுகாப்பிற்கு நூறு ஊர்காவல்படையினரை அனுப்பி வைத்துள்ளதாகவும் மேலும் நூறு படையினரை அனுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

### மூதூர் பிரச்சினை தொடர்பாக

## புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் நாளை திருமலையில் சந்திப்பர்

(திருமலை)

திருகோணமலை மூதூர் பகுதியில் தமிழர் மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் அண்மையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்து விடுதலைப்புலிகளுக்கும் முஸலிம்களுக்கும் இடையிலான சந்திப்பொன்றை திருமலை மாவட்ட கண்காணிப்புக்குழு ஏற்பாடு செய்துள்ளது. நாளை காலை 10 மணிக்கு திருகோணமலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கனகசிங்கம் விஜயபவான் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (713634271v) தமிழீழ வைப்பகப் புத்தகம், அடகுச்சிட்டை என்பன புதுக்காடு சந்திக்கும் இயக்கச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (3652)

### விற்பனைக்குண்டு

2004 தேசிய கல்வியியற் கல்லூரிக்கான விண்ணப்பமும் அஞ்சல், உப அஞ்சல் அதிகாரிகளுக்கான சிற்றூழியர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்ப் படிவமும் கந்தபுரத்தில் உள்ள வாணி(பிக்பென்ஸ்) புத்தக சாலையில் பெற்றுக்கொள்ளலாம். (சி.8467)

## புதுமுறிப்பு – கோணாவில் வீதி பாலத்திற்கு அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

புதுமுறிப்பு - கோணாவில் வீதியில் புதியபாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று நடைபெற்றது.

நேற்று நண்பகல் 12.00 மணிக்கு கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு மேற்படி பாலத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார். இவ் வைபவத்தில் வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் சிவராஜலிங்கம், கிளி. மாவட்ட நெக்கோட் நிறுவன பிரதித் திட்டப் பணிப்பாளர், மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நெக்கோட் நிறுவனத்தினரால் 45 லட்சத்து 87 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மேற்படி பாலத்தின் பணிகளை யதுர் என்ற பிரைன் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. (சோ)



## கலந்துரையாடல்

முல்லை வலயத்திற்கு உட்பட்ட 2003ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதி பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி இருக்கின்ற அனைத்து மாணவர்களுக்குமான கலந்துரையாடலும் நிர்வாகத் தெரிவும் இன்று 9.00 மணிக்கு பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றிய வளாகத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (26)

## ஊரக எழுச்சிப்பேரவை தெரிவு

பரந்தன் பிரதேசத்தில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவுகள் நடைபெற்று வருகின்றது.

கடந்த 16ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள தெரிவு 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இத் தெரிவு நிகழ்வில் எழுச்சிப்பேரவை கட்டமைப்பு தொடர்பாகப் பிரதேசப் பொறுப்பாளர் சே.சுதா கருத்துரைகளை வழங்கி வருகின்றார். (14)

## இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் - கிளிநொச்சி மாவட்டக் கிளை

## பதவி வெற்றிடம்

**பதவி:** கணினிப் பயிற்சி போதனாசிரியர்

**காலம்:** 03 மாதங்கள்

**தகைமை:** 01) அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
02) அனுபவச் சான்றிதழ்கள்

**சம்பளம்:** நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

**விண்ணப்ப கடைசித்திகதி: 23.08.2003**

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

தலைவர்,
இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம்,
கிளிநொச்சி.

நேர்முகப் பரீட்சைத் திகதி தகுதியுடைய விண்ணப்பதாரிகட்கு கடிதமூலம் அறிவிக்கப்படும்.

தகவல்:-
க.கணேஸ்,
கௌரவ செயலாளர்,
இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம்,
கிளி.மாவட்டக்கிளை.

(சி-8465)

## ஆறாம் ஆண்டு நீங்காத நினைவுகள்

தாயின் மடியில் 24 09 1971



தாயக மண்ணில் 20 08 1997

### லெப்ரினன்ட் இளந்திரையன்

**(கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணதாசன்)**
**இம்ரான் பாண்டியன் படையணி**

ஆறு ஆண்டுகள் சென்றாலும்உம்நினைவுகள் எம்மிலிருந்து
எளிதில் அகலப் போவதில்லை
எம் உள்ளம் என்றும் தவிக்குதப்பா.
தன் நாட்டுக்காய், தன்மண்ணுக்காய்
உரமாகிய தாசனே
நீ கொண்ட இலட்சியம்
நாமும் தோழர்களும் சுமந்து நிற்கின்றோம்.
நீ கல்லறையில் நிம்மதியாக உறங்கு.

*இவரையும் இவருடன் வீரகாவியமாகிய வீரமறவர்களையும் இந்நாளில் நினைவு கூர்ந்து இவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*"ஓம்சாந்தி"*

முகவரி:
இல:481,அக்கராயன்குளம்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.
தந்தை:-ச.கிருஸ்ணபிள்ளை
(தலைவர்,விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம்) கிளிநொச்சி.

(சி.8466)

## கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 2003 ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் உலர் உணவு விநியோகம் மேற்கொள்ள பின்வரும் அளவான நாட்டுப் புழுங்கல் அரிசி, கோதுமை மாவு வழங்கக் கூடிய பதிவு செய்யப்பட்ட உள்ளூர் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| மாதம் | நாட்டுப் புழுங்கல் அரிசி | கோதுமை மாவு |
|---|---|---|
| 2003 ஒக்டோபர் | 630 மெ. தொ. | 180 மெ. தொ. |
| 2003 நவம்பர் | 630 மெ. தொ. | 180 மெ. தொ. |
| 2003 டிசெம்பர் | 630 மெ. தொ. | 180 மெ. தொ. |

கேள்வி விண்ணப்பங்களை 2003 – 08 – 20 ஆம் திகதி முதல் 2003 – 08 – 28ஆம் திகதி வரை புனர்வாழ்வு செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இது தொடர்பான ஆவணங்களையும், மேலதிக விபரங்களையும் மேற்படி செலயகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகின்றேன்.

**தி. இராசநாயகம்,**
அரசாங்க அதிபரும், மாவட்ட கேள்விச்சபைத் தலைவரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8468)

## சாவு அறிவித்தல்

### வைத்திலிங்கம் பாலசிங்கம்

நயினாதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் – இரத்தினம் பண்ணையை வசிப்பிட மாகவும் கொண்ட வைத்திலிங்கம் பாலசிங்கம் அவர்கள் 18.08.2003 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் வைத்திலிங்கம் – தங்கமுத்துவின் அன்பு மகனும் முருகேசு – தங்கம்மாவின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், கஜந்தினி, கோதினி, கேதாரிணி, (உருத்திரபுரம் மகாவித்தியாலய மாணவிகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலாம்பிகை (கொழும்பு), பொன்னம்மா (கனடா), காலஞ்சென்ற உருத்திராப்பிள்ளை, சுப்பிரமணியம், நாகம்மா(இந்தியா), காலஞ்சென்ற சிவக்கொழுந்து, லெட்சுமி, யோகேஸ்வரி (பிரான்ஸ்) மகேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் சகோதரனும், சண்முகராசா (பிரதிக் கல்விப்பணிப்பாளர்), பரமேஸ்வரி, மகேஸ்வரி, கமலாவதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும்ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.08.2003 நாளை வியாழக்கிழமை பி.ப.4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று உருத்திரபுரம் இந்து மயானத்தில் தகனம் நடைபெறும்.

தகவல்:-
**மு.சண்முகராசா,**
**பிரதிக்கல்விப்பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

(3653)



## புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம்



### தமிழீழ விளையாட்டுத் துறையினரின் ஒத்திசைவுடன் நடாத்தும் மின்னொளியில்

## மாபெரும் விளையாட்டு விழா – 2003

**மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### விளையாட்டுக்கள் விபரம்

**01. உதைபந்தாட்டம்** 11 பேரும் காலணி அணிதல் வேண்டும். கட்டணம் 750.00

**02. கிரிக்கெட்** 11 பேரும் கொண்டது 15 ஓவர்கள். கட்டணம் 750.00

**03. பூப்பந்தாட்டம் (பட்மின்டன்)** ஒற்றையர் ஆட்டம். கட்டணம் 150.



போட்டிகளில் எத்தனை அணிகளும் பங்குபற்ற முடியும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 27.08.2003**

**குறிப்பு:**

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குட்பட்ட கழகங்களும் கடந்த 2 வருடங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்களும் பங்குபற்ற முடியும்.



**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடங்கள்**

**குமரன்ஸ் புத்தகசாலை, புதுக்குடியிருப்பு.**

**தமிழீழ விளையாட்டுத்துறை, கிளி.மாவட்ட செயலகம், கிளிநொச்சி.**

விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம்,
புதுக்குடியிருப்பு.

(சி-7776)

# பெருமளவு தங்கநாணயங்களுடன் மூழ்கிய பழங்கால கப்பலின் இடிபாடுகள் கண்டுபிடிப்பு

(வொஷிங்டன்)

அமெரிக்காவின் ஜோர்ஜியாக் கடற் பகுதியில் ஆயிரக்கணக்கான தங்க நாணயங்களுடன் மூழ்கிப் போன பழங்கால கப்பலின் இடிபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

1865 ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் இருந்து நியூஆர்லன்ஸ்சுக்குப் புறப்பட்ட எஸ்.எஸ். சுப்பலிங் எனப்பட்ட கப்பல் 59 பயணிகளையும் சுமார்20000தங்க நாணயங்களையும் ஏற்றிச் சென்றது.

ஆனால் இந்தக் கப்பல் நடுக்கடலில் விபத்துக்குள்ளாகி மூழ்கியது. பயணிகள் அனைவரும் மீட்கப்பட்டனர். என்றாலும் மூழ்கிய கப்பலை மீட்க முடியவில்லை. இந்நிலையில் பெரும் புதையலுடன் மூழ்கிய அந்தக் கப்பலை மீட்கும்பணியில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் செயற்படும் நிறுவனம் ஒன்று முயற்சி மேற்கொண்டுள்ளது.

இதன் பயனாக ஜோர்ஜியா மாகாணத்தையொட்டிய சர்வதேசக் கடற் பரப்பில் மூழ்கிய கப்பலின் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கப்பலோடு மூழ்கிய தங்க நாணயங்களின் இன்றைய மதிப்பு 900கோடி ரூபாய் என்பதால் இதனை மீட்கும் பணி மிகுந்த எச்சரிக்கையுடன் தொடங்கப்பட்டுள்ளது.



ஆகஸ்ட் 24 முதல் ஒருவர் 5 மில்லியன் டொலர்களுக்கு மேல் வைத்திருக்க முடியாது என அரசு அறிவித்ததையடுத்து சிம்பாப்வே நாட்டில் டொலர்களை எண்ணி அடுக்கும் சிம்பாப்வே நாட்டு வாசி.

# லைபீரிய அரசு - கிளர்ச்சியாளரிடையே சமாதான உடன்படிக்கை கைச்சாத்து!

## ஐ.நா.பொதுச் செயலர் வரவேற்பு

(மொன்ரோவியா)

**லைபீரியாவில் புதிய சனாதிபதியும் கிளர்ச்சியாளர்களும் இணைந்து கானாவில் நேற்று சமாதான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர். அதிகாரப் பகிர்வு மற்றும் இடைக்கால அலகு தொடர்பான பல விடயங்கள் இந்த உடன்படிக்கையில் உள்ளடங்குகின்றன.**


14 ஆண்டு காலமாக நடந்து வந்த போருக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதுடன் இரண்டு அண்டுகளில் பொதுத் தேர்தல நடத்துவதாகவும் அங்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. கிளர்ச்சியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கும் பதவிகளை வழங்கத் தான் தயாராக இருப்பதாக லைபீரியாவின் புதிய சனாதிபதி மோசப் பிளாஹ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த நாட்டில் நான் பிறந்ததிலிருந்து அமைதி ஏற்பட்டதைக்காணவில்லை என 38 வயது சண்போ மஸ்ஸாகுய் தனது 8வயது மகனைஅணைத்தவாறு கூறியதுடன் இனி அமைதி ஏற்பட்டு தான் வேலை செய்து பிழைக்கமுடியும் என்றும் கூறியுள்ளார்.

இந்த உடன்படிக்கையை ஐ.நா. செயலர் கொபிஅனான் பெரிதும் வரவேற்றுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தை தவறவிடாதமல் சர்வதேசமும் லைபீரியாவை மீண்டும் கட்டிஎழுப்ப ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கொபிஅனானின் பேச்சாளர் கூறியுள்ளார்.

ஐ.நா.உட்பட சர்வதேச அழுத்தங்களின் காரணமாக சார்லஸ் ரெயிலர் சனாதிபதி பதவியிலிருந்து நீங்கியதைத் தொடர்ந்து புதிய சனாதிபதி மோசஸ் பிளாஹ் சமாதான முயற்சிகளுக்கு அழைப்பு விடுத்தார். சமாதானப் பேச்சுக்கள் இறுக்கமான கட்டத்தில் இருந்த போதும் இரு தரப்பினரும் தற்போது இறங்கி வந்துள்ளமையால் சமாதான முன்னெடுப்புக்கள் மேம்பட வழி வகுத்துள்ளது.



அமைதி ஒப்பந்தம் ஏற்பட்ட நிலையில் தடை முகாம் ஒன்றில் வாக்குவாதப்படும் நைஜீரிய அமைதிப்படை வீரரும் லைபீரிய கிளர்ச்சிக்குழு உறுப்பினரும்.

## -பிரான்ஸ் வெப்ப உயிரிழப்பால்-

# சுகாதார அதிகார சபை பணிப்பாளர் பதவி விலகல்

(பாரிஸ்)

பிரான்சில் நிலவிவரும் வெப்பக் காலநிலை காரணமாக மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்ததையடுத்து அந்த நாட்டில் தேசிய சுகாதார அதிகார சபையின் பணிப்பாளர் பதவி விலகியுள்ளார்.

பணிப்பாளர் ஏபிரகாமின் பதவி விலகல் கடிதத்தைச் சுகாதார அமைச்சர் ஜீன்ஸ் பிராங்கோஸ் சிமாட்டா ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த அனர்த்தத்தினால் இது வரை உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்துக்கு அதிகம் எனவும் இதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

# மொறோக்கோ தற்கொலைத் தாக்குதல்; நால்வருக்கு நீதிமன்றம் மரண தண்டனை

(ரபாத்)

மொறோக்கோவின் கஸபாலன்கா நகரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக மொறோக்கோ நீதிமன்றம் நான்கு பேருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மே மாதம் 16 ஆம் திகதி மேற்படி நகரில் ஒரே தடவையில் மேற்கொள்ளப்பட்ட ஐந்து தாக்குதல்களில் 45 பேர் கொல்லப்பட்டார்கள். இத்தாக்குதல்களில் தற்கொலையாளிகள் 14 பேர் கொல்லப்பட்டார்கள். அவர்களில் உயிர் தப்பிய இரண்டு பேரும் மரண தண்டனைக் குள்ளானோரில் அடங்குகின்றனர்.

சலவி ஜிஹாத் என்ற இஸ்லாமிய அமைப்பே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள அலுவலகங்கள் மீதும் மொறோக்கோவிலுள்ள யூதர்கள் மீதும் தாக்குதல் நடத்துமாறும் இவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

# இரு நாள் பச்சிளம் குழந்தை ஆயுதப்பெட்டியில் இருந்து மீட்பு

ஈராக்கில் பிறந்துஇரண்டு நாட்களேயான பச்சிளம் குழந்தையொன்று ஆயுதங்கள் அடங்கிய பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாஸ்ரா நகரில் நேற்று முன்தினம் தேடுதலில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப்படையினர் ஒரு வீட்டில் ஆயுதங்களடங்கிய பெட்டி ஒன்றைக் கண்டுபிடித்தனர் அந்தப் பெட்டியைத் திறந்தபோது உள்ளே பிறந்து இரண்டே நாட்களான பச்சிளம் குழந்தையொன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூச்சு முட்டி இறக்கும் தறுவாயில் இருந்த அந்தக் குழந்தையை மீட்ட இராணுவத்தினர் முதலுதவியளித்துக் காப்பாற்றியுள்ளனர்.

உடல் நலம் குன்றியிருந்த அந்தக் குழந்தையின் தாயும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அந்த வீட்டிலிருந்து சிறுஆயுதங்கள், ராக்கெட்டும் கருவிகள் வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாக இராணுவத்தரப்பு கூறுகின்றது.

இது குறித்து குழந்தையின் தந்தை விசாரணைக்கு குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் இராணுவம் மேலும் கூறியுள்ளது.

## சுரங்க வெடிவிபத்து!

(பெய்ஜிங்)

சீனாவின் சுரங்கமொன்றில் ஏற்பட்ட எரிவாயு வெடிப்பின் காரணமாக ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 18பேர் நிலத்தின் கீழ் சிக்குண்டுள்ளார்கள். இவ்வாறு சிக்கியவர்களை உயிருடன் மீட்கக் கூடிய சாத்தியக் கூறு மிகவும் குறைவாகவே இருக்கின்றன என்று அந்த நாட்டின் உத்தியோக பூர்வ செய்தித்தாபனம் அறிவித்துள்ளது.

சீனாவின் சாங்கி என்ற வடபகுதி மாநிலத்தில் இவ்வனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

# சகாராவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐரோப்பிய பணயக் கைதிகள் விடுதலை

சகாராவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐரோப்பியப் பணயக் கைதிகள் 14 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பணயக் கைதிகள் அல்ஜீரியக் கிளர்ச்சியாளர்களால் ஐந்து மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் குழுவினர் பாதுகாப்புடன் இருப்பதாக உத்தியோகத்தர்கள் உறுதியளித்துள்ளனர். இவ்வுல்லாசப் பயணக் குழுவைச் சேர்ந்த ஒன்பது பேர் ஜேர்மன் நாட்டவர், நான்கு பேர் சுவிஸ் பிரஜைகள் மற்றவர் நெதர்லாந்து நாட்டவர். இன்று அவர்கள் மாலியின் தலைநகரை வந்தடைவார்கள்.

அல்ஜீரியாவின் தென்பகுதியில் பயணம் செய்து கொண்டிருந்த போது கடத்தப்பட்ட 32 ஐரோப்பியர்களில் 17 பேர் முன்னர் இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுவிக்கப்பட்டார்கள்.

# எதிர்க்கட்சி செயற்பாட்டை அ.தி.மு.க. தடுக்க முயற்சி

## -கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

காவிரி விவகாரத்தில் அ.இ.அ.தி.மு.க.வின் ஆரோக்கியமற்ற அணுகுமுறை காரணமாக பிரச்சினை மேலும் மோசமடைந்திருப்பதாக திமு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார். கடந்த ஞாயிறன்று திருச்சீராப்பள்ளியில் கூட்டத்தில் உரையாற்றுகையில் இதனைக் கூறியுள்ளார்.

விவசாயிகள், அரச ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் பறிபோனதை, மீண்டும் கொண்டுவர திமு.க.மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள குறைபிடுகளை சுட்டிக்காட்ட எதிர்க்கட்சிகள் முனையும் போது, அரசு பொய்வழக்குப் போடுவதாகவும், இதனால் எதிர்க்கட்சிகளின் திறமையான செயற்பாட்டை தடுத்துவிடமுடியாது என்றும் கூறியுள்ளார்.




இருளில் மூழ்கியிருந்த நியூயோர்க் நகரில் மீண்டும் மின்சாரம் கிடைத்தபின் "தப்பிப் பிழைத்திருக்கிறோம்" என்ற வாசகத்தைக் கொண்ட T சேட்டை விற்பனை செய்யும் வியாபாரி.

# சகவாழ்வு அரசியலில் சலிப்பு களமிறங்கத் துடிக்கும் சு. க.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய சக வாழ்வு அரசியல் சலித்துப் போய்விட்டதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. அதேவேளை ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிரான போராட்டங் களை இன்னமும் ஏன் நடத்தவில்லை? என பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும், அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள கீழ் மட்ட





உறுப்பினர்களும் கேள்வி எழுப்புவதாகவும் தகவல்கள் தெரி விக்கின்றன.

அதாவது ரணில் விக்கிரமசிங்க ஆட்சியை நீடிக்க அனுமதிக்கும் பொறுமை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்கள் வரை அனைவருக்கும் போய்விட்டதன் வெளிப்பாடாகவே இதனைக் கொள்ள வேண்டும்.

சனாதிபதி சந்திரிகாவின் கையில் நிறைவேற்று அதிகாரம் இருக்கையிலேயே மக்கள் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு எதிராக தீர்ப்பு வழங்கினர். இந்தத் தீர்ப்பை ஏற்று விலகிக் கொள்ள பொதுசன ஐக்கிய முன்னணி தயாராக இருக்க வில்லை. ஆனால் அன்று சனாதிபதி சந்திரிகாவிற்கு வேறுவழி எதுவும் இல்லாத காரணத்தால் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஆட்சியை அனுமதித்தார். சகவாழ்வு

**- வேலவன் -**

அரசியல் பற்றி சனாதிபதி சந்திரிகா பேசிக் கொண்டாலும் முட்டுக்கட்டை அரசியலே அவரால் நடத்தப்பட்டது என்பது அனைவருக்குமே புரிந்த விடயம். ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஒரு சிறிய விடயத்தைச் செய்வதற்கும் பலமுறை சிந்திக்க' வேண்டியிருக்கின்றது. சந்திரிகாவின் அதிகாரம் அதன்மீது பாயுமா? என ஆராய வேண்டியிருக்கிறது. அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்கும் சந்திரிகா குமாரதுங்க அதன் கூட்டுப் பொறுப்பை ஏற்காத நிலையிலும் இரகசியங் களைப் பேணாத நிலையிலும் பலவற்றை அமைச்சரவையில் விவாதிக்க முடியாத நிலையே உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் மிக முக்கியமான சாதனையாகக் கருதப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு தெரியாது செய்ய வேண்டிய நிலையேயிருந்தது. ஆகமொத்தத்தில் சகவாழ்வு அரசியல் என்று சந்திரிகா கூறிக் கொண்டாலும் ஆட்சி நகர சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரம் பெரும் தடையாகவே இருந்து வருகிறது.

எனவே சாதகமான ஒரு மாற்றம் ஏற்படும் வரை ரணிலின் ஆட்சியை சகித்துக் கொண்டிருக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, என்று சாதகமான சூழ்நிலை ஏற்பட்டதாக அவர் உணர்கிறாரோ அன்றே ரணிலின் ஆட்சியைத் தூக்கி வீசத் தயங்கமாட்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைப் பொறுப்பேற்ற வேளை இருந்த பொருளாதாரச் சூழ்நிலையும் ரணில் விக்கிரமசிங்க வின் முக்கிய நகர்வான சமாதான நடவடிக்கைகளில் புலிகள் நீண்ட நாட்களுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள் என சந்திரிகா நம்பியதும் தான் விரும்பிய சூழல் விரைவிலேயே உருவாகும் என்ற எண்ணத்தை சனாதிபதியின் மனதில் ஏற்படுத்தியது.

அதற்கு மாறாக பேச்சுவார்த்தை நீடித்ததும் அமைதிச் சூழல் காரணமாக பட்டுப் போயிருந்த சிறிலங்காவின் பொரு ளாதாரம் துளிர்விட ஆரம்பித்ததும் சந்திரிகாவின் நம்பிக்கையை கருக்கின. அதேவேளை அவரது நிறைவேற்று அதிகாரத்திற்கும் அது வரம்பிட்டது.

இந்நிலையில் இப்பொழுது பொறுமையிழந்துவிட்ட சனாதிபதி சந்திரிகா இதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முனைகிறார். முதலாவதாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒரு ஏமாற்று வேலை, டோக் கியோ மாநாடு ஒரு களியாட்ட விழா என்றெல்லாம் கூறிவந்தார். சமாதானப் பேச்சுக்களில் தோன்றியுள்ள தேக்க நிலையைப் போக்க தற்போது முன்வைக்கப் பட்டுள்ள இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு நாட்டை பிரித்துக்கொடுக்கும் நடவடிக்கை என வர்ணித்து வருகிறார். இதன் மூலம் சமாதான நட வடிக்கைகளுக்கு எதிரான ஒரு பரப்புரை முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

அடுத்து அவருக்கு மக்கள் ஆதரவு இருக்கிறதா? எனக் கணிப்பிடுவது அவசியமாக இருக்கிறது. ஏனெனில் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சிக் கலைப் பொன்றை மேற்கொள்வதெனில் மக்கள் ஆதரவின்றேல் பாதகமான விளைவே ஏற்படும். எனவே இதனை ஊகித்தறிய மாகாண சபைத் தேர்தல் ஒன்றை நடத்தக்கூடும் என பலரும் ஆருடம் கூறுகின்றனர்.

இன்னொரு பிரிவினர் பாராளுமன்றத்தைக் கலைக்காமல் ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவது பற்றிக் கூறி வருகின்றனர். குறிப்பாக அண்மையில் நிமால் சிறிபால டி சில்வா போன்றோர் அவ்வாறான நிலையொன்றை எதிர்பார்க்கின்றனர்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கும் கோரிக்கை, மேல் கொத்மலைத்திட்டம் தொடர் பாக ஆறுமுகம் தொண்டமானின் அதிருப்தி, ஈ.பி.டி.பி.யின் விடுதலைப்புலிகள் எதிர்ப்பு நிலைப்பாடு, ஜே.வி.பி.யுடனான கூட்டணி முயற்சி என்பனவற்றுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள முரண்பாட்டையும் பயன்படுத்த முடியும் என இவர்கள் வெளிப்படை யாகவே கூறிவருகின்றனர்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவும் சில பொருளாதார சிக்கல்களால் அபிவிருத்தி வேலை கள் சிலவற்றுக்கு நிதி ஒதுக்குவதில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் தொடர்பாகவும் அதிகாரப் போட்டி காரணமாகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவு ஏற்படக்கூடும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் நம்புகின்றனர். அவ்வாறான ஒரு பிளவின் மூலம் பாராளுமன்றத்தைக் கலைக்காமல் மூன்று மாத காலத்திற்குள் ஆட்சி மாற்றம் நடைபெறும் என இவர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை இந்த மாற்றத்தை மூன்றிலொரு வழிகளில் ஏற்படுத்த சனாதிபதி சந்திரிகா முயலக் கூடும் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிக்கின்றார். ஒன்று மாகாண சபைத் தேர்தல். இரண்டு சமாதான நடவடிக்கைகள் மீதான கருத்துக் கணிப்பு மூன்று ஆட்சியைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்துவது. இவற்றில் ஏதாவது ஒன்று இவ்வருட இறுதிக்குள் நடைபெறலாம் என்பது பலரது கணிப்பாகும். அதாவது ஏதாவதொரு தேர்தலை இலங்கை எதிர்நோக்குகிறது என்பதை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இதன் மூலம் வெளிப்படுத்துகிறார். இதனையே சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு தேர்தல் வந்தாலும் அதனை எதிர்கொள்ளத் தயாராகுமாறு தனது அமைப்பாளர்களுக்கு விடுத்த அழைப்பின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இங்கு சமாதான நடவடிக்கைகள் மீதான கருத்துக் கணிப்பு என்பது சனாதிபதி சந்திரிகாவுக்கு ஒரு விபரீதப் பரீட்சையாக அமையக் கூடும். இவ்வாறானதொரு தேர்தல் களத்தை அவர் உருவாக்குவதாயின் ஜே.வி.பி.யினதும், சிஹல உறுமய போன்ற கட்சிகளினதும் ஆதரவு கிட்டும். சமாதான முயற்சி கள் மீது மக்கள் முன்பிருந்த நம்பிக்கையைக் கொண்டிருக்க வில்லை எனக் கொண்டாலும் முற்றுமுழுதாக அதனை நிராகரிக்க தென்பகுதி மக்கள் முன்வருவார்களா? எனச் சோதித்துப் பார்க்க முயல்வது விஷப்பரீட்சையே இதில் சந்திரிகா தோல்வி கண்டால் அது பெரும் பின்னடைவாகவே முடியும்.

அடுத்ததாக மாகாண சபைத் தேர்தலை நடத்தி அவர் பலத்தைப் பரிசோதித்துப் பார்க்கக் கூடும். அதில் தோல்வி கண்டாலும் பெரும்பாதகமில்லை. வெற்றியடைந்தால் 1994இல் மேல் மாகாண சபைத் தேர்தலின் போது அடைந்த வெற்றியை முன்மாதிரியாகக் கொண்டு அடுத்து அவர் பொதுத் தேர்தலை நடத்த முயலலாம்.

ஆனால் இந்தத் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு பொலிஸ் திணைக்களமும் ஊடக அமைச்சும் அவருக்கு அவசியமானதாகும். அவரது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஆறு தேர்தல்களிலும் அவருடைய வெற்றிக்கு இவ்விரு திணைக்களங்களும் மிகவும் பயன்பட்டிருக்கின்றன. அவ் இரண்டையும் பெற்றுக் கொள்ளாது தேர்தலில் வெற்றிபெற முடியுமா? என்ற சந்தேகம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மத்தியிலுண்டு.

அதேவேளை தேர்தல் தொடர்பாக மேலும் இரண்டு விடயங் கள் பற்றி இப்பொழுது பேசப்பட்டு வருகிறன. ஒன்று புதிய தேர்தல் முறையொன்றை உருவாக்குதல். இரண்டாவது சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அமைத்தல். இதில் முதலாவது விடயத்திற்கு இரு பிரதான கட்சிகளினதும் ஆதரவு உண்டு. இதுதொடர்பாக அமைக்கப்பட்ட குழு எவ்வாறான முடிவை எடுக்கும்? எப்பொழுது இதன் பணிகள் முடியும்? என இப்பொழுது கூறிவிட முடியாது. அத்துடன் முடிவுகள் அமுலாக்கமும் எவ்வளவு தூரத்திற்கு கடைப் பிடிக்கப்படும் என்பதும் கேள்வியே.

ஆனால் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான சட்டமூலம் பொதுசன ஐக்கிய முன்னணியின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின் இறுதியில் ஜே.வி.பி.யுட





னான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப் பட்டது. ஆனால் இதனை அமுலாக்க சனாதிபதி சந்திரிகாவே பிரதான முட்டுக்கட்டையாகும். இதன் காரணமாக தேர்தல் ஆணையாளர் பதவி விலக முடியாது உள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இவை எதனையும் செய்து பார்க்க சந்திரிகாவுக்குள்ள பிரதான முட்டுக் கட்டை மக்களின் ஆதரவு தமக்கு உண்டா? என்ற சந்தேகமே. பரிசோதனை முயற்சிகள் பாதகமாக அமைந்துவிடுமோ? என்ற அச்சமும் தனது நிறைவேற்று அதிகாரம் மேலும் கீழடைந்து விடுமோ? என்ற பயமும் அவரை பலவாறு சிந்திக்கவைக்கிறது. ஆனால் சகவாழ்வு அரசியல் சலித்துவிட்டால் களமிறங்குவது தவிர வேறு வழியில்லை. □

## பூநகரிப் பிரதேசத்தில் மாதர் சங்கங்களின் சங்கமம்

பூநகரிப் பிரதேச மாதர்சங்கங்களின் சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. பூநகரி சாமிப்புலம் தமிழ்க்கலவன் பாடசாலையில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வு ஆசிரியை கவிப்பிரியா தலைமையில் இடம் பெற்றுள்ளது.

நிகழ்வில் பொதுச் சுடரினை ஆலங்கேணிக் கிராம சேவையாளர் செ.சின்னராசா ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ விடுதலைப்புலிகளின் பூநகரிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் நிருபன் ஏற்றிவைத்தார்.

முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப்ரினண்ட் மாலதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரினை திலீபன் மருத்துவமனைப் போராளி நளாயினி ஏற்றிவைக்க மலர் மாலையினை கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் தமிழ் மலர் அணிவித்தார். இந்த நிகழ்வில் 400க்கு மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாவீரன் பண்டார வன்னியனின் நினைவு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

மாவீரன் பண்டார வன்னியனின் நினைவு நாள் தொடர்பான கலந் துரையாடல் ஒன்று நடைபெற்றுள் ளது.

இக்கலந்துரையாடல் நேற்று முன்தினம் முல்லைத்தீவு உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதி காரி கிருஸ்ணபிள்ளை தலைமை யில் இடம்பெற்ற நிகழ்வில், எதிர் வரும் 25ஆம் திகதி காலை கற் சிலைமடு பண்டார வன்னியன் சிலைக்கு முன்பாகவும் இரவு நிகழ்வு களை முள்ளியவளை வித்தியானந் தாக் கல்லூரியிலும் நடாத்தத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உதவி அரச அதி பர்கள் முல்லைத்தீவு மாவட்ட அரசி யல் துறைப் பொறுப்பாளர் பண்டார வன்னியன் அறங்காவலர் சபை நிர்வாகத்தினர் பிரதேசப் பொறுப் பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (20),(பா)

## அவுஸ். தூதரக உயர் அதிகாரி நாளை யாழ்ப்பாணம் வருகை

கொழும்பிலுள்ள அவுஸ்திரேலி யத் தூதுவராலயத்தின் பிரதி உயர் ஸ்தானிகர் நாளை யாழ்ப்பாணத் திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். இவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் போது யாழ். அரச செயலகத்தில் உயர் மட்ட அதிகாரிகளுடன் புனர் வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபி விருத்தித் திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடுவார் என்று தெரி விக்கப்படுகின்றது.

# சர்வதேச சமூகத்தால் இலங்கையில் சமாதானத்தைப் பாதுகாக்க முடியுமா?

"இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள திட்டவரைவினை ஆராய்ந்து அதற்குப் பதிலாகப் புலிகளின் திட்டவரைவு அடுத்த மாத இறுதிக்குள் கையளிக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன." என்ற விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் கூற்றுக்கள் விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ஒரு திட்டவரைவை முன்வைக்கத் தயாராகிவிட்டனர் என்பதையும், அதற்கானதொரு கால எல்லையைக்கூட மனத்தளவில் தீர்மானித்துவிட்டனர் என்பதையுமே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

கடந்த யூனில் டோக்கியோவில் இடம்பெற்ற சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்பாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்துத் திட்டவரைவை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் எனக் கோரியவேளை, அதை அடுத்து அரசாங்கம் முன்வைத்த யோசனைகள் விடுதலைப்புலிகளால் நிராகரிக்கப்பட்டிருந்தன. இந்த வகையில் டோக்கியோ மாநாட்டிற்கு முன்பாக அரச தரப்பினர் முன்வைத்திருந்த இரண்டு யோசனைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.



இந்நிலையில் டோக்கியோ மாநாட்டிற்குப் பின்பாகச் சுமார் ஒரு மாத காலத்தின் பின்னர் அரசாங்கம் புதியதொரு நகல் திட்டம் ஒன்றை நோர்வேத் தரப்பு ஊடாக விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்துள்ளது. இத்திட்ட வரைவும் விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கும், நிலைப்பாட்டிற்கும் ஏற்றவாறானதாக இல்லாத போதும், இதனை நிராகரிக்காது இதனைப் பரிசீலித்துத் திருத்தத்துடன் கூடியதொரு மாற்று யோசனை ஒன்றை விடுதலைப்புலிகள் கையளிக்க முன்வந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் வரலாற்றில், தீர்விற்கான நகல் திட்டம் ஒன்றினை அவர்கள் முன்வைக்கத் தயாராகியுள்ளமை இதுவே முதல்தடவையாகும். ஆகையினால், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தற்பொழுது ஏற்பட்டுள்ள தடங்கல்களைப் போக்குவதற்கு அவர்கள் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்றே கூறுதல் வேண்டும்.

இந்நிலையில் தற்பொழுதுள்ள கேள்வியானது இதனை அடியொட்டியதாக- அதாவது ஏற்றுக்கொண்டு அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு முன்வருமா? பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படினும் அதில் முன்னேற்றகரமான நிலைப்பாட்டை அரசாங்கம் கைக்கொள்ளுமா? இவையாவும் முற்றுப் பெறினும் சனாதிபதி சந்திரிகா இதற்கு அனுமதி அளிப்பாரா? என்பதே ஆகும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் மாற்று யோசனைகளுடன் கூடிய இடைக்கால நிர்வாகத்திற்கான திட்டவரைவு ஒன்றை முன்வைக்கத் தயாராக முன் வந்தமைக்குச் சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளுக்குக் கொடுத்து வந்த நிர்ப்பந்தமே காரணம் என ஒரு தரப்பினர் கருதுவதுண்டு. ஆனால், விடுதலைப்புலிகள் அத்தகையதொரு நிர்ப்பந்தத்திற்குப் பணிந்துஇதனை மேற்கொண்டிருப்பார்கள் எனக் கொள்வதற்கு இல்லை.

விடுதலைப்புலிகள் மீது சர்வதேச சமூகம் பல தடவை நிர்ப்பந்தங்களை மேற்கொண்டதுண்டு. ஆனால், விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்தின் கருத்துக்களுக்குச் செவிமடுத்து வந்துள்ளனர் எனினும் அவர்கள் எப்பொழுதுமே நிர்ப்பந்தத்திற்கு அடி பணிந்து செயற்பட்டவர்கள் அல்ல. உள்ளூர் அரசியல் இராணுவ யதார்த்த நிலை மற்றும் சர்வதேச அரசியற்சூழ்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே விடுதலைப்புலிகள் தமது அரசியல், இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டனர் என்பதே உண்மையாகும்.

இந்தவகையில், விடுதலைப்புலிகள் தற்போதும் உள்ளூர் மற்றும் அரசியல் யதார்த்தத்தினை நன்கு புரிந்து கொண்டே தமது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டுள்ளனர். ஆகையினால் இதற்குச் சிலர் சர்வதேச நிர்ப்பந்தம் காரணம் என விளக்கமளிக்க முற்படுகின்றமை அவர்களைப் பொறுத்த விடயம். ஆனால், விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளைக் கோரி வந்தது என்பது நிராகரிக்க முடியாததே.

குறிப்பாக நோர்வே, யப்பான், அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இத்தகைய கோரிக்கையை முன்வைத்ததுண்டு. இந்த நிலையில் புலிகளின் மாற்றுத் திட்டவரைவானது வெளியாரின் நிர்ப்பந்தத்தின் பாற்பட்டதல்ல ஆயினும், அவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் முன்வைக்கப்படவுள்ளது எனவும் கொள்ளத்தக்க தொன்றே.

இந்நிலையில் எழும் கேள்வியானது, விடுதலைப்புலிகள் முன்வைக்கும் மாற்றுத திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும், அதுவெற்றியளிப்பதற்கும் சர்வதேச சமூகம் என்ன செய்யப் போகின்றது என்பதே ஆகும். ஏனெனில் இவ் இடைக்கால நிர்வாகத்திற்கான மாற்று யோசனை எத்தகைய எதிர்ப்பிற்கு உள்ளாகும் என்பது தமிழ் மக்களுக்கு நன்கே தெரிந்த தொன்று.

அதாவது, இவ்விடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த மாற்றுத் திட்ட யோசனைகளை அரசாங்கம் எந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளும் என்பது கேள்விககுரியதே. ஏனெனில் இடைக்கால நிர்வாகம் என்பதற்கு ஆளும் தரப்பிற்குள்ளேயே எதிர்ப்பு உண்டு என்பது மட்டுமல்ல, அத்தகையதொரு திட்டத்திற்கு முழு அளவில் அவர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டவர்களாகவும் தெரியவில்லை.

எடுத்துக்காட்டாக ஐ.தே.முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்படும் எனத் தெரிவித்திருந்தது. அதன் பின்னர் விடுதலைப்புலிகளுடன் நடந்த பேச்சுவார்த்தைகளில் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வொன்றிற்கு உடன்பட்டிருந்தது.

ஆனால், இடைக்கால நிர்வாகத் திட்டவரைவை முன்வைக்குமாறு விடுதலைப்புலிகள் கோரிய போது தமது யோசனைகளில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு/சபை என்ற வார்த்தைகளையே பிரயோகிக்க ஆளும் தரப்பு தயாராக இருக்கவில்லை. தமது மூன்றாவது திட்டவரைவில் கூடத் தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு என்றே குறிப்பிட்டிருந்தது. சமஷ்டி ஆட்சி முறைகளைப் பரிசீலிக்க இணக்கம் கண்ட அரசாங்கம், ஒற்றை ஆட்சி அரசியல் யாப்பிற்குள் நின்றுகொண்டே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்துப் பேச முன்வந்தது.

இவ்வாறாக ரணில் அரசாங்கம் தனது அறிவிப்புக்களில் இருந்தும் பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட இணக்கப்பாடுகளிலிருந்தும் பின் வாங்குவதற்குத் தனியாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் உள்ள நிறைவேற்று அதிகாரத்திற்கு மட்டுமல்ல, தமது கட்சியிலிருந்தும், கூட்டணியிலிருந்தும் எதிர்ப்புக்கள் கிளம்பி விடலாம் என்ற ஐயப்பாடும் காரணமாகும்.

ஆகையினால், விடுதலைப்புலிகள் முன்வைக்கப் போகும் மாற்று நகல் திட்டம் குறித்துப் பிரதமர் ரணில் தனது கட்சியின் இடத்தில் இருந்தும் தமது ஆட்சியிலுள்ள கூட்டணிக் கட்சிகளிடம் இருந்தும் சம்மதம் பெறமுடியுமா? என்பதும் கேள்விக்குரியதே. ஏற்கனவே கூட்டணியில் உள்ள ஒரு சில கட்சிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நெருக்கடிகளைக் கொடுத்து வருவதும், 'பிளாக் மெயில்' செய்வதுபோன்று நடந்து கொள்வதும் உண்டு.

ஆனால், இவையாவற்றையும், டோக்கியோவில் கிடைக்கப் பெற்றுள்ள நிதி உதவிகளைக் காரணம் காட்டி பிரதமர் ரணில் விக்கிரம சிங்க வெற்றி கொள்ள முற்படலாம். இதில் அவருக்குச் சாதகமான முடிவுகள் கூடக் கிடைக்கப் பெறலாம். இதனால் அவர் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் அளவிற்குக் கூட முன்னேற வாய்ப்புண்டு.

ஆனால், உள்வீட்டு விவகாரத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெற்றி கொண்டு விடினும், சனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து இத்திட்டத்திற்கு உயர்ந்தபட்ச எதிர்ப்புக் கிளம்பும் என்பது கேள்விக்கிடமற்றதொன்று. இதற்கான சமிக்கைகளை அவர் ஏற்கனவே வெளிப்படுத்தியும் உள்ளார். இதில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு/சபை என்பதே தேவையற்றது என்ற அளவில் கூட அவரது நிலைப்பாடு உள்ளது.



ஐ.தே. முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எங்கோ ஒரு மூலையில் சிறிய அளவில் இடைக்கால நிர்வாக சபை பற்றிக் குறிப்பிட்டது என்பதற்காக அது நிறைவேற்றப்படவோ அன்றிப் பரிசீலிக்கப் படவேண்டும் என்பதும் அவசியமல்ல என்பது சனாதிபதியின் தற்போதைய நிலைப்பாடாகும். இது குறித்து அண்மையில் அவர் வெளிப்படையாகப் பிரஸ்தாபித்தும் இருந்தார்.

இது மட்டுமல்ல, ரணில் அரசாங்கம் இடைக்கால திட்டவரைவு குறித்து தமக்கு அனுப்பி வைத்த ஆவணம் விடுதலைப்புலிகளுக்கு நோர்வே ஊடாக அரசாங்கம் அனுப்பி வைத்த ஆவணத்தில் இருந்து மாறுபட்டது எனப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பியுள்ள சனாதிபதி சந்திரிகா இப்பிரச்சினையைக் கைவிடுவதாகவும் இல்லை. கடந்த வார இறுதியில் கூட இது தொடர்பாக சனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இதுமட்டுமல்ல, கடந்தவார இறுதியில் சனாதிபதி விடுத்திருந்த "அரசாங்கத்திற்கும் -விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முடிவுகள் எதனையும் நான் ஏற்க வேண்டிய அவசியம் இல்லை" என்ற அறிவிப்பானது, விடுதலைப்புலிகளுக்கும் - அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் முடிவின் அமுலாக்கத்தையே சர்ச்சைக்குரிய தொன்றாகுவதாக இருக்கக் கூடியதாகும்.

இது ஒருபுறம் இருக்க - ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் ஆயுட்காலம் எதுவரை என்பதும் கேள்விக்குரியதொன்றாகவே உள்ளது. ஒருபுறத்தில், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் - ஜே.வி.பி.யும் கூட்டுச் சேர்ந்து இவ் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடலாம் என்ற எதிர்பார்க்கை அரசியல் வட்டாரங்களில் பரவலாகவே உள்ளது. ஜே.வி.பி.யும் - பொ.ஐ. முன்னணியும் ஆட்சிக் கவிழ்ப்பிற்காக தமது கொள்கை மற்றும் முரண்பாடுகளையும் கைவிடத் தயாராக உள்ளன.

ஜே.வி.பி.க்கும் பொ.ஐ. முன்னணிக்கும் இடையிலான கூட்டணிக்கு இன்னும் சில விடயங்களில் முன்னேற்றம் காண வேண்டியுள்ளதே காரணம் எனச் சில தரப்புத் தகவல்கள் கூறினும், ஆட்சிக் கவிழ்ப்பிற் கான சந்தர்ப்பம் ஏற்படும் வரையிலேயே கூட்டணி தாமதமாகி வருவதாகவும் ஒரு தரப்பினர் பலமாக நம்புகின்றனர்.

எதிர்த்தரப்பினர் இவ்வாறாக இருக்கையில் ஆளும் கூட்டணிக்குள் காணப்படும் முரண்பாடுகள் சிலவும் கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. இது சில வேளை ஆட்சிக் கவிழ்ப்பிற்குச் சாதகமான நிலையையும் உருவாக்கிவிடக் கூடியதானதொரு சூழ்நிலையை அது உருவாக்கலாம் அன்றி அரசாங்கத்திற்கு நெருக்கடி வரும் வேளையில் இவை கூட்டணியை உடைத்துக் கொண்டு வெளியேறலாம்.

எடுத்துக் காட்டாக ஆட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியல் நடவடிக்கைகளை ஓர் 'பிளாக் மெயில்' பாணியிலானதாக அமைத்துக் கொண்டுள்ளது போல் தெரிவதாக அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். இந்நிலையானது எல்லை மீறிச் செல்லும் பட்சத்தில் இது சனாதிபதியினதோ அன்றி பொ.ஐ. முன்னணி மற்றும் ஜே.வி.பி.யின் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைக்கு சாதகமானதாக அமையக் கூடியதொன்றாகும்.

இந்த நிலையில், இன்றுள்ள முக்கிய கேள்வியானது, விடுதலைப்புலிகள் சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால நிர்வாக சபைக்கான மாற்றுத் திட்ட வரைவு தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி, நிறைவேற்றி அமுலாக்கம் செய்ய சர்வதேச சமூகம் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கை என்ன என்பதே ஆகும்.

அதாவது, ஐ.தே. முன்னணி அரசாங்கத்திற்குள் காணப்படும் முரண்பாடுகளைப் போக்கவும்- அவ் அரசாங்கத்தைப் பாதுகாப்பதோடு, சனாதிபதி சந்திரிகா இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான பேச்சுவார்த்தைகளைக் குழப்பாமலும், அதன் முடிவுகளை அமுலாக்கம் செய்வதற்கு இடையூறு விளைவிக்காமலும் பார்த்துக் கொள்ள முடியுமா என்பதே ஆகும். அதாவது, சமாதானத்தைப் பாதுகாக்க அதில் ஆர்வம் காட்டும் நாடுகளால் முடியுமா? என்பதே ஆகும்.

ஆனால், இவ்விவகாரம் உள்நாட்டு பிரச் சினை என்ற ரீதியிலும், அரசியல் யாப்பு களுக்கும் சட்ட நடவடிக்கைக்கும் உட்பட்ட விவகாரம் என்ற ரீதியிலும் இன்று பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி வரும் நாடுகள் பின் வாங்கி விடக்கூடும். இதுவே உலக வரலாறும் கூட. அவ்வாறு அவர்கள் நடந்து கொண்டால், இனிவரும் காலங்களில் தமிழ் மக்கள் முன்பும் புலிகள் முன்பும் அவர்கள் கோரிக்கைகளை முன் வைப்பதும் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க முயல்வதும் பொருத்தப் பாடானதாகவோ, ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவோ இருக்கமாட்டாது.

**ஜெயராஜ்**

## கோலவுடை உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிக்கக் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

அஞ்சல், உபஅஞ்சல் அலுவலகங்களில் பணிபுரிவதற்கான கோலவுடை உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு எட்டாம் வகுப்புச் சித்தி பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதேச அஞ்சல் உப அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறும் விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 27இற்கு முன் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர், வவுனியா முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டக்கொள்ளப்படுகின்றது. (பா)

## புனித அந்தோனியார் றோ.க.வில் அறிவகம் மண்டபம் திறப்பு

முரசுமோட்டை 2-ம் கட்டை புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் அறிவகம் மண்டபத் திறப்புவிழா நேற்று நடைபெற்றது. பரந்தன் 1ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இ. சிவகுருநாதனால் ஐம்பதினாயிரம் ரூபா செலவில் இவ்வித்தியாலயத்தில் (ஆண்டு - 11) கல்வி கற்று காலமான அவருடைய மகன் சிவேந்திரன் ஞாபகார்த்தமாக இந்த மண்பத்தை அமைக்கப்பட்டுள்ளது. மண்டபத் திறப்பு விழா அதிபர் தெய்வேந்திரம் தலைமையில் மு.ப.9.00 மணிக்கு ஆரம்பமானது. அறிவக கட்டடத்தை கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி. சிற்றம்பலம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். அடுத்து அறிவக பெயர்ப்பலகையை மண்டபம் அமைத்த இ. சிவகுருநாதனும், அவரது பாரியாரும் திரை நீக்கம் செய்து வைத்தனர். சிவேந்திரன் திருவுருவப் படத்துக்கு செ.ஜெயநாதன் மலர் மாலை அணிவித்தார். திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர் கே. சுதா ஏற்றினார். சிறப்புரைகளை முரளி, சிற்றம்பலம் ஆகியோர் நிகழ்த்தினர். (14)

# 1981 குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் உயர்கல்வி அனுமதியால் மாணவர் பாதிப்பு

## -வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்திச்சபை கவலை

(வவுனியா)

**வவுனியா மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டை வைத்தே இன்று பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றிற்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதன் காரணமாக மேற்படி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தகுதி இருந்தும்கூட பல்கலைக் கழகம் செல்ல முடியாது உள்ள தாக வவுனியா மாவட்டக் கல்வி அபிவிருத்திச் சபை கவலை தெரிவித்துள்ளது.**

வவுனியா மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு குடிசன மதிப்பீடு செய்யப் பட்டபோது 95000 மக்கள் வாழ்ந்து வந்தனர். எனினும் வவுனியா மாவட்டத்தில் தற்போது உள்ள சனத்தொகை இரண்டு இலட்சத்து பத்தாயிரமாகும். 1981இல் மேற் கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட் டின்படி தொடர்ந்தும் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இத னால்18முதல் 16 வரையான மாண வர்களே ஒவ்வொரு துறைக்கும் செல்ல முடிகின்றது. இதனால் எத்த னையோபல்கலைக்கழகம் செல் லக்கூடிய தகுதியுடைய மாணவர் கள் இருந்தும் கூட அவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத இக் கட்டான நிலையை எதிர்கொள் கின்றனர் என வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்திச் சபை கவலை தெரிவித்துள்ளது.

# ஐ.நா.நிறுவன நிதியுதவியில் மீன்பிடி உபகரணம் வழங்கல்

முல்லை மாவட்டகடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்க சமா சத்தினால் நேற்றுமுன்தினம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட நிதியுதவியுடன் மீன்பிடி உபகர ணங்கள் வழங்கப்பட்டன. க.தொ. கூ.ச. சமாசத் தலைவர் செ.இரத் தினம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் கடற்றொழில் உபகர ணங்களான வலை இயந்திரம் (எஞ்சின்)படகு என்பன வழங் கப்பட்டன. இவைகளை உ.அ. அ.தலைமைப்பீட அதிகாரி, கூட்டு றவு உதவி ஆணையாளர், நீரியல் வள உதவிப் பணிப்பாளர், கடற் புலிகளின் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் ஆகி யோர் வழங்கினார்கள். (20)

# கல்வி டிப்ளோமா பயிற்சிக்கு புதியவர்களைச் சேர்த்தல்

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்குப் புதியவர்களைச் சேர்த்துக் கொள் வதற்காக விண்ணப்பம் கோரப்படு கின்றது. அரச பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடி யும்.

விண்ணப்பிக்கத் தகுதியானவர் கள் எதிர்வரும் 23.08. 2003 சனி யன்று மு.ப.9.00மணிக்கு சிறிசுப்பிர மணிய வித்தியாசாலையில் சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவ ணபவனைச் சந்தித்து விண்ணப் பிப்பதற்கான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவம் பெறு வதற்காக ரூபா 100 இலங்கை வங் கியில் செலுத்திய பற்றுச் சீட்டைக் காண்பித்தே பெற்றுக் கொள்ள முடியும் எனவும் சிரேஷ்ட விரிவுரை யாளர் க.சரவணபவன் தெரியத் தருகிறார்.பணம் செலுத்துவதற்கான பற்றுச் சீட்டுப் படிவம் 23-08-2003 அன்று பெற்றுக் கொள்ளமுடியும். (26)

# முறிகண்டியில் சிற்றுண்டி விற்பனையில் ஈடுபடும் சிறார்களின் அவலம் .......!

முறிகண்டிப் பகுதியில் சிற்றுண்டி வகைகளின் விற்பனையில் ஈடு பட்டுவரும் சிறுவர் சிறுமிகள் தீய பழக்கங்களுக்கு ஆளாகும் சம்ப வங்கள் இடம்பெற்று வருகின்றன.

முறிகண்டிப் பகுதியில் தரித்து நிற்கும் வாகனங்களில் ஏறியும் மற்றும் பயணிகளிடமும் சிற்றுண்டி வகைகளை விற்பனை செய்வதில் சிறுவர், சிறுமிகள் ஈடுபட்டு வரு வதைக் காணக் கூடிதாக இருக் கின்றது.

குறிப்பாகக் கச்சான்,கடலை, உணவுப் பொட்டலங்களை விற் பனை செய்யும் இச்சிறார்கள் திருட் டுப் போன்ற தீய பழக்கங்களைச் செய்து வருவதோடு, சிலர் கையும் மெய்யுமாக அகப்பட்டுப் பெரிய வர்களால் தண்டிக்கப்பட்டும் வருகின்றனர்.

இவ்வாறு, பேருந்தில் ஏறிக் கச்சான் விற்ற சிறுவன் பிரயாணி ஒருவரின் கைப்பையிலிருந்து வீடியோ ஒளிநாடாவைத் திருடிய போது அகப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சிற்றுண்டி விற் பனையில் ஈடுபடும் சிறார்கள் தமது எதிர்கால வாழ்வைச் சீரழிக்க முற் பட்டி ருப்பதை சமூக சேவை ஸ்தாப னங்கள் கண்டும் காணாததும் போல் இருப்பதாகக் குற்றச்சாட் டுக்கள் எழுந்துள்ளன. (09)



கடந்த ஞாயிறன்று ராகமவில் நடைபெற்ற ரயில் -கார் விபத்தில் சின்னாபின்னமாகியகார்- இவ்விபத்தில் இருவர் பலியானதுடன் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளானார் (இக்கார் 200மீற்றர் இழுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.)

# இந்திய இழுவைப் படகு காரைநகரில் மூழ்கியது

நெடுந்தீவு மீனவர்களால்பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களையும், அவர்களது படகுகளையும் சிறிலங்காக் கடற்படையினர் காரைநகர் கடற்படைத்தளத்துக்கு கொண்டுசென்ற வேளை இந்திய மீனவர்களின் இழுவைப்படகு ஒன்று நீரில் மூழ்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த வேளை மீனவர்களால் பிடிக்கப்பட்ட இவர்கள் பின் சிறிலங்கா கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டமை தெரிந்ததே.

# வெப்ப அதிகரிப்பால் நோய்கள் பரவுகின்றன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக நிலவி வரும் கடுமையான வெப்பம் காரண மாகப் புதுவிதமான வைரஸ் காய்ச் சல், சளிசுரம், தலையிடி உட்படப் பல நோய்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைரஸ் காய்ச்சல் சிறுவர் முதல் பெரியவர்வரை பலரையும் பாதித் துள்ளது. போதனா வைத்தியசாலை உட்பட மாவட்ட வைத்தியசாலை களிலும் தினமும் மக்கள் பெருந் தொகையாகச் சிகிச்சை பெறுகின் றனர்.

அத்துடன் விடுதிகளிலும் அனும திக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதேபோல் நுவரெலியா மாவட் டத்திலும் முக்கிய இடங்களான இறம்பொடை, பூண்டுலோயா, தவ லந்தன்ன, கட்டுகித்துளை, ஹெல பொடை, மடக்கும்புர போன்றவற்றில் ஒருவிதமான வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக மருத்துவ அதிகாரி அஜித் விஜேரட்ன தெரிவித்துள் ளார்.

# கால்நடை வழங்கல்

போரூட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் பூதன் வயல் கிராமத்தில் 19 பயனாளி களுக்கு பால் மாடுகளும், 08 பய னாளிகளுக்கு ஆடுகளும் வழங்கப் படவுள்ளன.

திட்டத்தின் முதல் கட்டமாக 05 பயனாளிகளுக்கு மாடுகளும், 05 பயனாளிகளுக்கு ஆடுகளும் வழங் கப்பட்டன. (20)

# உயர்தரப் பரீட்சையில் சிறந்த பேறுபேற்றைப் பெற்றோர்

(உடையார்கட்டு)

தற்போது வெளிவந்திருக்கும் 2003 க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் உடையார்கட்டு மகா வித்தியாலய மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு.

வர்த்தகப்பிரிவு:-

ரி. நிவேதினி 2ஏ,சி மாவட்டநிலை 20, ரி.சதீஸ்குமார் 2பி,சி, கே. சுகந் தன் 2ஏ,பி மாவட்டநிலை10, ரிஷாந்தா காந்தன் ஏ,பி,எஸ்., எஸ். லோஜன்சி 2பி,சி, எஸ்.புவனேஸ்வரி 2ஏ,பி மாவட்ட நிலை 11,பி.தினேஸ்குமார் 2ஏ, சி.

கலைப் பிரிவு:-

பி.லிசோதா ஏ,2பி மாவட்டநிலை 21, வி. சிவமதி ஏ,2சி, எஸ். சோபா, ஏ,2பி மாவட்டநிலை18, வி. விஜய ரூபன் 2ஏ,சி மாவட்டநிலை 26. (19)

# இரவுநேரக் கற்றலுக்காக சூரிய மின்கலம் வழங்கல்

(முல்லைத்தீவு)

மாணவர்களின் இரவுநேரக் கற் றலுக்காக பூதன்வயல், ஆறுமுகத் தான்குளம் ஆகிய இரு கிராமங் களுக்கு தலா ஒவ்வொரு சூரியமின் கலத் தொகுதி வழங்கப்பட்டுள் ளது.

பெருண்மிய மறுபுனரமைப்பு நிதி யுதவியுடன் ஊரக வளர்ச்சி பணி யும் முல்லை. பொருளாதார அபி விருத்தி நிறுவனமும் இணைந்து ஒவ்வொன்றும் முப்பதினாயிரம் ரூபாய் பெறுமதியான சூரியமின் கலத் தொகுதியை வழங்கின.

இந்த உதவியின் ஊடாக மாகா ணங்களின் கல்விநிலை மேம்பட வழியேற்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (20)

# ஒன்பது அரசாங்க நிறுவனங்களை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை!

(கொழும்பு)

வரிசெலுத்தாது தவிர்த்து வந்த வர்களுக்கு வரி மன்னிப்புச் சட்டத் தின் மூலம் அரசாங்கம் சலுகை யளித்ததால் 2000 கோடி ரூபாயை திறைசேரி இழந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளு மன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

இவ்வாறு வருமானத்தை இழந் துள்ள அரசாங்கம், கஜானா காலி யாகவுள்ளது என்று கூறி சமுர்த்தி மற்றும் உரவகைகளுக்கான மானி யத்தை நீக்கி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை நட்டத்தில் இயங் கும் ஒன்பது அரச நிறுவனங்களை யும் விற்பனைசெய்தவதற்கான ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக கம்ப காவில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றும் போது விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

# பிரிட்டன் தடுப்பு முகாமிலிருந்து தப்பிச்சென்ற ஆறு இலங்கையர் குறித்து விசாரணை

பிரிட்டனில் தடுப்பு முகாம் ஒன் றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு இலங்கையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது தொடர்பான விசாரணைகளை அந்த நாட்டின் உள்விவகார அமைச்சு ஆரம்பித் துள்ளது.

ஹாங்சோ பகுதியிலுள்ள தடுப்பு முகாம் ஒன்றிலிருந்து இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தப்பிச் சென்றுள்ளதாக பீ.பீ.சி தகவல்கள் தெரிவிக்கின்றன. 20 அடி உயர மான மதிலைத் தாண்டி இவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும், இவர் களுக்குத் தடுப்பு முகாமின் உதவி கள் கிடைத்திருக்கும் என்றும் நம்பப் படுகிறது. இவர்கள் பலமுறை அரசி யல் தஞ்சம் கோரியிருந்த போதும் பிரித்தானிய அரசு அதனை நிரா கரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் முன்னர் வெளியான தகவலில் நான்கு இலங்கையர் தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்பட் டமை தெரிந்ததே.

# முக்கிய பாதாளக் குழுத் தலைவர்கள் நாட்டை விட்டுத் தப்பியோட்டம்

## சிறிலங்கா குற்றப் புலனாய்வுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த 82 பேர் அண்மைய நடவடிக் கையில் கைது செய்யப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் முதல் கைது செய யப்பட்ட இவர்களுடன் 150 துப்பாக் கிகள், 126 கைக்குண்டுகள், 12000 தோட்டாக்கள் என்பனவும் கைப்பற் றப்பட்டுள்ளதாக பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

பிரதான பாதாள உலகக் கோஷ் டித்தலைவர்களும் அவர்களது முக்கிய சகாக்களும்நாட்டைவிட்டு ஓடிவிட்டதாக பொலிசார் கருதுகின் றனர். அவர்கள் இந்தியாவிற்கோ மேற்கு நாடுகளிற்கோ ஓடியிருப்ப தாக நம்பப்படுகின்றது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்த சந்தேக நபர்கள் தப்பியோடுவதற்கு உதவியாக மோசடி நடவடிக்கை கள் இடம்பெற்றிருப்பதாக பொலிசார் கூறுகின்றனர். இது தொடர்பான விசாரணைகள் தொடர் கின்றன.

# தனித்து விடப்பட்ட சமூகமாக மலையகத் தமிழர் வாழப்போவதில்லை

## - அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

மலையகத் தோட்டத் தொழி லாளர்கள் நாட்டின் ஏனைய சமூகங் களில் இருந்து தனித்து விடப்பட்ட ஒரு சமூகமாக தொடர்ந்தும் வாழப் போவதில்லை என அமைச்சர் சந் திரசேகரன் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்கள் மலை யக சமூகம் என்ற பெயரில் வாழ்ந் திருக்கிறார்கள்.

எதிர்காலத்தில் அத்தகைய மாற் றங்கள் அற்ற முழுமையான உரி மைகள்கொண்ட ஒருமனித இனமாக தேசத்தின் ஏனைய மக்களோடு இணைந்து வாழும் சமூகமாக இவர்கள் மாற்றப்படுவார்கள் என்று அமைச்சர் பி. சந்திரசேகரன் வலியு றுத்தியுள்ளார்.



சிந்தனைக்கு

எதிரியைவிடத் துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20-08-2003

# கதிர்காமரின் கவலை!

"போர் நிறுத்தச்சூழ்நிலையைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் அமைப்பு இராணுவ ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் தங்களை மிகவும் பலப்படுத்திக் கொண்டு வருகின்றது.இதனை இந்தியாவிற்கு உணரவைப்பதற்காகவே நான் இந்தியா வந்துள்ளேன்" என முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முக்கிய ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவிற்கான தனது தற்போதைய விஜயத்திற்கு விளக்கம் அளித்துள்ளார்.

கடந்த காலத்தில், விடுதலைப்புலிகள் பற்றி விளக்கம் அளிப்பதற்காகத் தொடர்ந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும்,அமெரிக்காவிற்கும் பறந்து கொண்டிருந்த லக்ஷ்மன் கதிர்காமரின் பயணதூரம் தற்பொழுது குறுகிய அண்டை நாடான இந்தியாவுடன் நின்று கொண்டுவிட்டது.

அதாவது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இனப்பிரச்சினை விவகாரத்தினை நன்கு புரிந்து கொண்டுள்ளதோடு, சமாதான முயற்சிகளுக்குத் தம்மாலான உதவிகளையும் அவை வழங்கி வந்துள்ளன. அத்தோடு, விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்தும் ஓரளவேனும் திருப்தியும் கொண்டுள்ளன.

இதன்காரணமாகவே மேற்கு ஐரோப்பிய நாடுகள் பல விடுதலைப்புலிகளுக்கும் – அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை நடத்தத் தமது நாடுகளில் அனுமதி அளித்துள்ளதோடு, விடுதலைப்புலிகளின் விஜயங்களுக்கும் விசாக்களை வழங்க முன்வந்துள்ளன.

இந்நிலையில், தான் விடுதலைப்புலிகள் பற்றி மேற்குலகில் பேசுவதைவிட இந்தியாவில் பேசுவது லாபகரமானதாக இருக்கும் என லக்ஷ்மன் கதிர்காமர் முடிவு செய்துள்ளார் போலும். இந்தியாவில் ஒரு தரப்பினரிடம் உள்ள புலிகள் எதிர்ப்புவாதம் இதற்கு வாய்ப்பானதாகவுள்ளது. இதன் அடிப்படையிலேயே வரைபடங்கள், விளக்கப்படங்கள் என்பனவற்றுடன் அவர் இந்தியா சென்றுள்ளார்.

லக்ஷ்மன் கதிர்காமரின் செய்தியாளர் மாநாட்டின் சாராம்சமானது, இலங்கையில் அமைதி திரும்பிவிடவில்லை. விடுதலைப்புலிகள் போருக்குத்தயாராகி வருகிறார்கள். அவர்கள் திருகோணமலையைத் தாக்கிக் கைப்பற்றப்போகின்றார்கள். இதனால் இந்தியா குத்தகைக்குப் பெற்றுக்கொண்டுள்ள எண்ணெய்க் குதங்கள் புலிகளின் கைகளுக்குச் சென்றுவிடப்போகின்றது. இந்தியா இனியும் பார்த்துக்கொண்டிருந்தால் அதற்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுவிடும்என்பதே ஆகும்.

இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையீடு செய்து தனது கைகளைச் சுட்டுக் கொண்ட விவகாரம் அனைவருக்குமே தெரிந்ததொன்று. ஆனால் அது இந்தியாவின் தவறான அணுகுமுறையால் விளைந்ததொன்று. ஆனால்,அன்று சிறிலங்காவில் ஆட்சியில் இருந்தவர்கள் தவறான வழியில் வழிநடத்தியமையினாலேயே இந்தியாவிற்கு அத்தகையதொரு கசப்பான அனுபவம் ஏற்படவேண்டிவந்தது. ஆனால்,கதிர்காமர் இன்று இந்தியாவை அத்தகையதொரு தவறான வழியில் வழிநடத்தவே முற்படுவதாகத் தெரிகிறது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது.இம் முயற்சிகள் குறித்து மிகவும் ஆற அமர அது தனது அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்தி வருகிறது. மறுவளமாக இனப்பிரச்சினை விவகாரத்தில் தீவிர அக்கறை கொண்டதாகவும் தன்னைக் காட்டிக்கொள்ள அது விரும்பவில்லை.

இத்தகையதொரு நிலையில், கதிர்காமர் இலங்கை விவகாரம் குறித்து உண்மைக்கு மாறான விதத்தில் தகவல்களை அளிப்பதன்மூலம் இந்தியாவை இவ்விவகாரத்தில் இழுத்துவிடப் பார்க்கின்றார்.அதாவது இந்தியாவின் விரோதிகளிடம் இலங்கைத் தீவின் ஒரு பகுதியின் ஆட்சி அதிகாரம் சென்றுவிடப் போவதாகக்கூறி இந்தியாவைக் குழப்பிவிடப்பார்க்கின்றார்.

ஆனால்,விடுதலைப்புலிகள் இயக்கமோ– கதிர்காமர் கூறுவது போன்று யுத்த தயாரிப்பிலும்,முஸ்தீப்பிலும் ஈடுபடுவதாக இல்லை என்பது ஒரு புறம் இருக்க, புலிகள்இந்திய விரோதப் போக்கைக் கொண்ட நிலைப்பாட்டுடன் செயற்படுவதாகவும் இல்லை. கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கூட விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியில் இந்தியாவின் நலன்களுக்கு நாங்கள் விரோதிகள் அல்ல எனக் குறிப்பிட்டுள்ளதோடு சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவும் தனது தார்மீக ஆதரவைத்தர வேண்டும் எனக்கோரியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த நிலையில் கதிர்காமர் உள்நாட்டிலும், மேற்குலக நாடுகளிலும் தன்னால்பேச முடியாததை இந்தியாவில் பேச முற்பட்டுள்ளார் என்பதே உண்மை. இதனைச் சரிவரப்புரிந்துகொண்டு இந்தியாநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் கடந்த காலம்போல் அது கைகளை சுட்டுக்கொள்ள வேண்டிவராததோடு தமிழ் மக்களுடன் கைகோர்த்தும் கொள்ள முடியும்.

## வங்கியில் இடப்பட்ட பணத்திற்கு தரகுபெற்ற கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணை

(கொழும்பு)

வங்கியில் இடப்பட்ட பணத்தின் மீது தரகுப்பணம் பெற்றதாகச் சந்தேகிக்கப்படும் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் மீதான வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இவ்விசாரணைகள் தொடர்பாக கூட்டுறவுத்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், இம் மோசடியில் கூட்டுறவுத்துறை அதிகாரிகளின் பங்கு குறித்து, எழுத்து மூலமான அறிக்கை எதுவும் வழங்கப் படவில்லை என்றார். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றது. கூட்டுறவுக் கிராம வங்கியின் வைப்புப் பணத்தை விரும்பும் எந்தவொரு வங்கியிலும் இடுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிமை உண்டு எனக் குறிப்பிட்ட அந்த அதிகாரி கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திடம் அல்லது அமைச்சரிடம் இதற்கான அனுமதியை கூட்டுறவுத் திணைக்கள கிராமிய வங்கி பெற வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

## அரசாங்கத்தின் சீர்திருத்தப் பணிகளுக்கு ஆ.அ.வங்கி 100 கோடி டொலர் ஒதுக்கு

அடுத்த நான்கு வருடங்களுக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டத்தில் அரசாங்கத்தின் சீர்திருத்தப் பணிகளுக்கென சுமார் 100 கோடி அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

வட-கிழக்குப் பிரதேசங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்குக் குறிப்பிடத்தக்களவு தொகை ஒதுக்கப்படுமென ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஆசிய அபிவிருத்திவங்கியின் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இலங்கையை அபிவிருத்தி செய்வதே என அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையின் வறுமை மனிதனாலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளதெனக் கூறிய அவர், பல தசாப்தங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த துரதிஷ்டவசமான கொள்கைகளே நாட்டின் வறுமைக்குக் காரணம் எனக் கூறியுள்ளார்.

## சிறைச்சாலைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிர்வாக நடவடிக்கைகள் பாதிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களின் காரணமாக சிறைச்சாலை நிர்வாகத்தில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

அனுபவமிக்க அதிகாரிகளாகக் கடமையாற்றிய 04 ஆணையாளர்கள் ஓய்வு பெற்றுச்செல்கின்றனர்.அத்துடன் 1500பதவி வெற்றிடங்களும் நிலவுகின்றன. இதனால் சிறைச்சாலை நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

ஆணையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிறைச்சாலை திணைக்களத்தில் அனுபவமிக்க அதிகாரிகள் இல்லாமையினால் இந்தச் சிக்கலான நிலை தோன்றியிருப்பதாக சிறைச்சாலைத் திணைக்களத் தகவல்கள் கூறுகின்றன.

கைதிகள் அதிகரித்துவரும் நிலையில்இந்நிலைமை பெரும்சிக்கலை உருவாக்கி இருப்பதாகக் கூறப்படுகிறது.

## ஐ.தே.க - மு.கா புத்தளத்தில் முரண்!

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த ஐ.தே.க.வினரால் சிறி.ல.முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு எதிராக நடத்தப்படும் அரசியல் நடவடிக்கைகளை நிறுத்தாவிடில் மாற்றுவழி அரசியல் நடவடிக்கைகளில் தமது அணியினர் ஈடுபட நேரிடும் எனக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஹமிஸ ஐ.தே.கட்சியினரை எச்சரித்துள்ளார்.

அவ்வறிவித்தல் தமது கட்சி உறுப்பினர்கள் ஐ.தே.க அரசியல் வாதிகளால் பழிவாங்கும் நடவடிக் கைக்குள்ளாக்கப்படுகின்றனர். சில தீய சக்திகள் இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தவும் கட்சிகளுக்கிடையே கசப்புணர்வை ஏற்படுத்தவும் திட்டமிடுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

## தகாத வார்த்தைகளால் பேசிய எம்.பி.மீது முறைப்பாடு

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த புத்தளம் மாவட்ட எம்.பி.திசநாயக்கா பிரயாணம் செய்த வாகனம் சிலாபம்-தெதுரு ஓயா வீதிச் சோதனைச் சாவடியில் கடமையாற்றும் பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்ட போது எம்.பி.தகாத வாத்தைகளால் பேசியது தொடர்பாகச் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற அதிகாலை வேளை ஜயதிலகா என்ற பொலிசார் தடைமுகாமில் கடமையிலிருந்ததாகவும் இவரின் வாகனத்தைக் கண்டு டோச் லைட்டைப் பிடித்துக் கொண்டு வந்த பொலிசார் வாகனத்தை நிறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

வாகனத்தில் இருந்து இறங்கிய மேற்படி எம்.பி. என்னைத் துப்பாக்கியை நீட்டித் தடுப்பதற்கு நீ யார்? என்று கேட்டதோடு தகாத வார்த்தைகளாலும் பேசியுள்ளார். மேலும் இது பற்றி பொலிஸ் நிலையத்தில் பேசுவதாகவும் கூறியிருக்கிறார். சம்பந்தப்பட்ட பொலிசார் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதாகவும் விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## வெளிநாட்டுக் கார் வரிவிலக்கு விவகாரம்; சச்சினுக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை

வெளிநாட்டுக் காருக்கு சுங்கவரி விலக்குப் பெற்ற விவகாரத்தில் பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு டில்லி உயர் நீதிமன்றம் நேற்றுப் புதிதாக அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்துச் சாதனை புரிந்தமைக்காகச் சச்சினுக்கு இத்தாலியிலுள்ள சி.எச்.கார் நிறுவனம் பரிசாக அளித்த பெராரி கார் கடந்த 09 ஆம் திகதி அவருக்குக் கிடைத்தது.

டெண்டுல்கர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்தக் காருக்கான 1 கோடி ரூபாய் சுங்கவரியை மத்திய அரசு விலக்கிக்கொண்டது.

இது தொடர்பாக டில்லி உயர் நீதிமன்றம் தன்னிச்சையான வழக்கு ஒன்றைப் பதிவு செய்து, டெண்டுல்கருக்குக் கடந்த புதன்கிழமை நோட்டீஸ் அனுப்பியது.

இந்நிலையில் சுங்கவரி விலக்குத் தொடர்பாக டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஒருவர் பொதுநலன் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளதால் வழக்கு விசாரணையைத் தலைமை நீதிபதி பட்டீல் தலைமையிலான 02 நீதிபதிகள் வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு விளக்கமளிக்குமாறு சச்சின் டெண்டுல்கருக்குப் புதிய அழைப்பாணை அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சச்சின் காருக்கான சுங்கவரியைத் தாமே கட்டுவதாக சி.எச்.கார் நிறுவனம் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.




## நியூசிலாந்து அணியில் மக்மிலனுக்கு வாய்ப்பு

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணியில் மக்மிலன் மீண்டும் இடம்பெற்றுள்ளார். காயம் காரணமாக ஷேம்வோண்ட் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் முதல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்கின்றது.

2 டெஸ்ட் போட்டிகளிலும் முத்தரப்பு ஒரு நாள் போட்டிகளிலும் அந்த அணி விளையாடுகின்றது.

கப்டன் பிளமிங் தலைமையில் இந்தியா வரும் நியூசிலாந்து அணியில் மக்மிலன் இடம்பெற்றுள்ளார்.

வெனின்ஸ்டனில் நேற்று அறிவிக்கப்பட்டுள்ள நியூசிலாந்து அணி விபரம் வருமாறு:- பிளமிங், நொர்தன் ஆஸ்லே இயாம் டக்ளஸ், ரிச்சர்ட் ஜோன், ரோபின் காட், மைக்கல் நேசன், மக்மிலன், ஜேக்கப் ஓரம் மார்க் ரிச்சட்கன், காட்பைன், டர்ரன் ட/பி, டேனியல் விட்டோரி, லோ வின்சன்ட், கார்வ் பிரைட்மன் ஆகியோர்.

# ஈராக்கில் ஐ.நா.அதிகாரிகள் தங்கும் விடுதி மீது வாகனக் குண்டுத் தாக்குதல்

## - 16 பேர் பலி; 50க்கு மேற்பட்டோர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் தங்கும் விடுதிமீது



வெடிமருந்து நிரப்பிய ட்ரக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது ஒரு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் என ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

நேற்று இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் 16பேர் கொல்லப்பட்டதோடு 50 இற்கும் மேலானோர் காயமடைந்துள்ளனர்.

விடுதியின் ஒருபகுதி முழுமையாக சிதைந்துள்ளது. குண்டு வெடித்தசமயம் இந்தக் கட்டடத்தினுள்ளே ஈராக்கிற்கான ஐ.நா.அதிகாரியான சலீம் லோனே மற்றும் ஐ.நா.பாதுகாப்புச் செயலருடைய ஈராக்கிற்கான சிறப்புத்தூதுவரும் அகப்பட்டுள்ளனர். இவர்கள் இருந்த அறையின் நடுவிலேயே ட்றக் மோதி குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இதனால் அறையை மூடி இடிபாடுகள் வீழ்ந்துள்ளன.

மீட்புப் பணியாளர்கள் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தாக்குதல் குறித்து ஐ.நா. தலைமை அலுவலகத்திலுள்ள வணிகத்துறைக்கான ஐ.நா.தூதுவர் மேற்றன் டல்ராம் சென்ரா அவர்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் ஒரு காட்டுமிராண்டித்தனம் என்று ரஷ்யா கூறியுள்ளது.

# மட்டு.பல்கலை கல்விசாரா ஊழியர் நேற்று கண்டனப் பேரணி

(மட்டக்களப்பு)

இம்மாதம் 12 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கிழக்கு பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் மட்டக்களப்பு நகரில் நேற்று கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

சங்கத் தலைவர் சூரியகாந்தன் தலைமையில் தாதியர் பயிற்சிப்பள்ளி கட்டட முன்னிலையில் ஆரம்பித்த இந்தக் கண்டனப் பேரணியில் கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள். விரிவுரையாளர்களான நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

சம்பள உயர்வு வழங்கு, சம்பள முரண்பாட்டை நீக்கு,பல்கலைக்கழகங்களைத் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கையைக் கைவிடு,தொழிற்சங்கப் போராட்டத்திற்கு அரசியல் சாயம் பூசாதே போன்ற பல்வேறு சுலோக அட்டைகளைக் கண்டனப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் தாங்கியிருந்தனர்.

பின்னர் சங்கப் பிரதிநிதிகள் குழு ஒல்லாந்தர் கோட்டையில் இயங்கும் மாவட்ட செயலகத்திற்குச் சென்று அரச அதிபருக்கு முகவரியிட்ட மனுவை மேலதிக அரச அதிபர் புண்ணியமூர்த்தியிடம் கையளித்துள்ளனர்.




சம்பள முரண்பாட்டை நீக்குதல். பல்கலைக்கழகங்களைத் தனியார் மயப்படுத்துதலைக் தடுத்தல் போன்ற 21 கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு கிழக்குக்குட்பட்ட இலங்கைமுழுவதிலுமுள்ள 13 பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த 12 ஆயிரம் கல்விசாரா ஊழியர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

## திருமலை உப்புவெளியில் கொல்லப்பட்ட -

# முஸ்லிம் இளைஞர்கள் குறித்து பலபரபரப்பான தகவல்கள்

திருமலை, உப்புவெளி கப்பற் தளப்பகுதியில் தொழில்புரிந்து வந்து

சென்ற வாரம் கொலை செய்யப்பட்ட இரு முஸ்லிம் இளைஞர்களின் கொலைக்கும், பின்னர் இடம்பெற்ற இரு முஸ்லிம்களின் கொலைகளுக்கும் ஏதும் தொடர்பிருக்கிறதா என்பதை விஷேட சி. ஐ. டி. பிரிவினர் ஆராய்ந்து வருவதாக தெரியவருகிறது. இப்படிக் கொலை செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்களுக்கும், பாதாள உலகக் கடத்தல் கும்பல்களுக்கும் ஏதும் தொடர்பிருக்கலாமா என்பதையும், ஆட்கடத்தல், போதைப் பொருள் கடத்தல் போன்றவற்றில் ஈடுபடும் இரகசியக் குழுக்களோடு இவர்களுக்குத் தொடர்பிருக்கிறதா என்பதையும் உறுதி செய்ய, பொலிசார் ஆதாரங்களைத் தேடிவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில், இவர்கள் கொலை செய்யப்பட்ட இடத்தில் எதுவித ஆதாரங்களோ தடயங்களோ இல்லாமல் முற்றாக மறைக்கப்பட்டதற்கான காரணம் என்னவாக இருக்கலாம் என்பதை அறியவும் பொலிசார் முயன்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கொலை செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள், முஸ்லிம் காங்கிரசுடனும், ரவூப் ஹக்கீமுடனும் நெருங்கிய தொடர்புடையவர்களின் செயற்பாட்டாளர்கள் என்று கொழும்புப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது.

### மூதூருக்கு...

மூதூர் முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு 200 ஊர்காவல்படையினரை அனுப்பி வைக்குமாறு உள்துறை அமைச்சரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த வாரம் கேட்டிருந்தது தெரிந்ததே.

மேலும் மூதூரில் பொலிசார், கலகமடக்கும் பொலிசார்,படையினர் ஆகியோரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பதற்றம் நிலவுவதால் 400 பொலிசார் மேலதிக பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.

திருமலை உப்புவெளி கப்பல்த் தளத்தில் தொழில்புரிந்த இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கடந்த வாரம் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, சம்மாந்துறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இரண்டு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நேற்றும் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் பிரதேசத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

### புலிகள்...

நடைபெறும் மேற்படி சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் மூதூர் பகுதி முஸ்லிம் மக்களின் சமாதானக் குழுவினரும் கலந்துகொள்ள உள்ளனர்.

இச்சந்திப்பினை திருமலை மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் அப்டெல் புர்கான் தலைமை தாங்கி நடத்துகின்றார். (25)

### பாம்பு...

தீண்டியதாகவும் உடனே கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். (14)

### தமிழீழ..

தமிழீழக் கல்விக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்வரலாற்றுக் கண்காட்சி இன்றுகாலை 9.00 மணி முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.(பா)

### புலிகளின்..

பிரதமருக்கு தெரிவித்துவந்த போதும இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை யென சனாதிபதி தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் உத்தியோகப்பற்றற்ற முறையில் தமது அரச நிர்வாகத்தை விரிவுபடுத்தி வருவதாகவும் சனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமைகளுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து பிரதமர் மக்களுக்கோ பாராளுமன்றத்திற்கோ அல்லது அமைச்சரவைக்கோ இதுவரை தெளிவுபடுத்தவில்லையென்றும் சனாதிபதி தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### நெடுந்தீவு...

நீண்ட நேரமாக விசாரணைக்கு உட்படுத் தியுள்ளனர். அத்துடன் வயது குறைந்த மீனவர்களை மறித்து நீண்ட நேரம் விசாரித்து உடற்ப ரிசோதனை மேற்கொண்டு வருவதுடன் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருட்களையே வள்ளங்களின் பாவனைக்கு கடலுக்குக் கொண்டு செல்லுமாறு அனுமதித்துள்ளனர்.

அத்துடன் சிலரை கடந்த சனிக்கிழமை இதே கடற்பரப்பில் வைத்து 60 இந்திய மீனவர்களைப் பிடித்த சம்பவத்தில் ஈடுபட்டுள்ளீர்களா? என விசாரணை செய்ததுடன் அவ்வாறு ஈடுபட்டவர்கள் தொடர்பான விபரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கையிலும் இக்கடற்படையினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

### வலையை...

வலைகளை வீசிவிட்டு காலை அவற்றை எடுப்பதற்கு செல்லும் போது அதில் பிடிபட்டுள்ள மீன்களையும், வலைகளையும் அபகரித்துச் சென்றுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

மேற்படி சம்பவங்களைக் கண்டும் காணாதது போலிருக்கும் சிறிலங்காக் கடற்படையினர் இவ் விடயத்தில் கவனம் செலுத்தாதிருந்தால் தாமும் வடமராட்சி, நெடுந்தீவு மற்றும் சுழிபுரம் போன்ற பிரதேசங்களில் இந்திய மீனவர்களை பிடித்ததுபோல நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகக் கூறியுள்ளனர். (33)

### நாம்..

தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ற வகையிலும் தான் மேற்கொள்ளப்போகின்றோம். இந்த அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ளும் என நம்புகிறோம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிரான்சில் நடைபெறவுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்ளகக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்திலிருந்து கொழும்பு நோக்கி உலங்குவானூர்தி மூலம் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இக்குழுவில் தொல்காப்பியன், நெடியோன், அலெக்ஸ், மொழிபெயர்ப்பாளர் ஜோர்ஜ் மற்றும் அறிவு ஆகியோர் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து உலங்குவானூர்தி மூலம் கொழும்பிற்குச் சென்றனர். மேலும், மட்டக்களப்பிலிருந்து பிற்பகல் 2.05 மணியளவில் மூத்த தளபதி கேணல் கருணா, பாரதிராஜ், கஸ்ரோ ஆகியோரும் உலங்குவானூர்தி மூலம் கொழும்பிற்குச் சென்றுள்ளனர்.

இவர்களுடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் இணைந்துகொள்வர். இவர்கள் அனைவரும் இன்று பாரிஸ் நோக்கி புறப்படுவர். (பா)

### காணாமல்...

தனது வீட்டிற்குச் சென்றவேளை காணாமற் போயுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டு தெரிய வருவதாவது, இவர் முகமாலைப் பகுதியிலுள்ள சோதனைச் சாவடிப் பகுதியில் வைத்தே காணாமல் போயுள்ளார் எனத் தெரியவருகிறது. இவர் காணாமல் போனமையை அறியாது இவரைத் தேடி இரு உறவினர்கள் கடந்த மாதம் 01ஆம திகதி கிளிநொச்சி வருகை தந்த வேளை இருவரில் புங்குடுதீவு 10ஆம வட்டாரத்தைச் சேர்ந்த மரியகுமார் (வயது-35) என்பவர் முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து காணாமல் போயுள்ளார். இவருடன் சென்ற மற்றைய உறவினர் மனித வுரிமை ஆணைக்குழுவிடம் முறையிடுகையில், தமக்கு முன்பாக சோதனைகளை முடித்துக் கொண்டு கூடாரத்தை விட்டு வெளியேறிய போது இவர் காணாமல் போயுள்ளதாக கூறியுள்ளார். (33)


# பதவி வெற்றிடம்

## (அ) உதவி ஆசிரியர்

ஈழநாதம் நிறுவனத்தில் பணிபுரிய உதவி ஆசிரியர்கள் தேவை.

**1. தகைமை**

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தி
- துறைசார்ந்த அனுபவம், மேலதிக தகைமைகள் சிறப்புக் கவனத்தில் கொள்ளப்படும்.

**2.** மாதாந்த வேதனமாக ரூபா 4000 வழங்கப்படும். மேலதிக நேர வேலைக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்.

**3.** பட்டதாரிகளும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**4.** பணியின் ஆரம்பகாலத்தில் மூன்று மாதகாலப் பயிற்சி வழங்கப்படும்.

## (ஆ) கணினி பக்க வடிவமைப்பாளர்

**தகைமை** D.T.P+ 0/L சம்பளம் ரூபா 3500

**கணினி தட்டெழுத்தாளர்**

**தகைமை: M.S.Word + 0/L சம்பளம் ரூபா 3000**

இதில் அனுபவமோ மேலதிக தேர்ச்சியோ இருப்பின் விசேட சம்பளம் வழங்கப்படும். கூடுதலானநேர வேலை ( O.T) கொடுப்பனவு வழங்கப்படும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு உரிய ஆவணங்களுடன் ஜெயந்தி நகரிலுள்ள ஈழநாதம் பணிமனைக்கு நேரில் சமுகம் தரவும்.

-நிர்வாகம்


# சாவு அறிவித்தல்

## பெரியதம்பி-அருணாசலம்

லோங்வில் – றத்தோட்டை எனும் இடத்தைச் சேர்ந்த பெரியதம்பி அருணாசலம் (வயது – 94) அவர்கள் 19 – 08 – 2003 அன்று காலமானார். இவர் விவேகானந்தாநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த சக்திவேல் (மொழிபெயர்ப்பாளர், ஈழநாதம் ஆசிரியர் பகுதி), ஜெயச்சந்திரன், ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரெல்லா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், ஜோர்ச் ராஜேந்திரகுமார், விமலாகரன், ராதிகா, பிரபா, கவிதா, தேவிகா, சுதர்சன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவரது மரணக்கிரியைகள் தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:- அ. சகதிவேல்,
விவேகானந்தா நகர்,
கிளிநொச்சி.

(இ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.